RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING    மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 276 | அக்டோபர்.7 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## அமைச்சர் துரைமுருகன் தாக்கல் செய்த மனுவுக்கு தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: அக்.7-

தனக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கை வேலூர் நீதிமன்றத்தில் இருந்து சென்னை சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றி 2019ம் ஆண்டு பிறப்பித்த அரசாணையை எதிர்த்து அமைச்சர் துரைமுருகன் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006 11ம் ஆண்டுகளில் திமுக ஆட்சி காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவி வகித்த துரைமுருகன், வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்தது.

வேலூர் நீதிமன்றத்தில் இருந்த இந்த வழக்கை, சென்னையில் உள்ள ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றி 2019ம் ஆண்டு தமிழக அரசு அரசாணை பிறப்பித்து இருந்தது.

இந்நிலையில், தனக்கு எதிரான வழக்கை வேலூர் நீதிமன்றத்தில் இருந்து சென்னை சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றிய அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என துரைமுருகன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், 2017ம் ஆண்டு வழக்கில் இருந்து தன்னை விடுவித்து வேலூர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், 2019ம் ஆண்டு வழக்கு சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கில் இருந்து விடுவித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து, தற்போது இந்த வழக்கை சிறப்பு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி வி.லட்சுமி நாராயணன், தமிழக அரசு அக்டோபர் 23ம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தார்.



## பாக் நீரிணை கடல் பகுதியை நீந்திக் கடந்த மாற்றுத் திறனாளி சிறுவன்

ராமேசுவரம்: அக்.7-

ஊனம் தடையல்ல என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த இலங்கையில் உள்ள தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனை வரையிலான பாக் நீரிணை கடல் பகுதியை மாற்றுத் திறனாளி சிறுவன் 9 மணி நேரம் 11 நிமிடங்களில் நீந்திக் கடந்தார். சென்னை முகப்பேர் மேற்கு பகுதியைச் சேர்ந்த பெரியார் செல்வன், பத்மப்பிரியா தம்பதியின் மகன் புவிஆற்றல் (12). முகப்பேரில் உள்ள தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கிறார். இவர் முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி யாவார்.

2022ல் சென்னை ஷெனாய் நகரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வழிகாட்டுதலுடன், மாணவர் புவி ஆற்றல் நீச்சல் பயற்சியைத் தொடங்கினார். 2024ல் கோவாவில் நடைபெற்ற தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்நிலையில், நீந்துவதற்கு ஊனம் தடையல்ல என்பதை வலியுறுத்துவதற்காக, இலங்கையில் உள்ள தலைமன்னாரிருந்து தனுஷ்கோடி வரை சுமார் 30 கி.மீ. தொலைவிலான பாக் நீரிணைக் கடலை நீந்துவதற்காக இந்திய வெளியுறவுத் துறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சகத்திடம் அனுமதி கோரியிருந்தனர்.

உரிய அனுமதி கிடைத்த நிலையில் கடந்த 3ம் தேதி ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஒரு விசைப் படகு மற்றும் நாட்டுப் படகில்சிறுவனின் பெற்றோர், பயிற்சியாளர், மருத்துவர் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினருடன் தலைமன்னாருக்கு புறப்பட்டு சென்றனர். நேற்று முன்தினம் அதிகாலை 2.45 மணியளவில் தலைமன்னாரிலிருந்து நீந்தத் தொடங்கிய சிறுவன் காலை 11.56 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்பகுதியை வந்தடைந்தார்.

தொடர்ந்து 9 மணி நேரம் 11 நிமிடங்களில் 30 கி.மீ. தொலைவு நீந்தியுள்ளார். இதன் மூலம் மாற்றுத் திறனாளி மாணவர், கடலில் அதிக தூரமும், அதிக நேரமும் தனியாக நீந்திய சாதனையை புவி ஆற்றல் படைத்துள்ளார்.

இதற்கு முன் தலைமன்னார், தனுஷ்கோடி இடையேயான பாக் நீரிணை கடல் பகுதியை 2022 மார்ச் 20ம் தேதி மும்பையை சேர்ந்த, ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி ஜியா ராய் தனது 13 வயதில் நீந்திக் கடந்துள்ளார். இந்த சாதனையையும் சிறுவன் புவி ஆற்றல் முறியடித்துள்ளார். சிறுவன் புவி ஆற்றலுக்கு இந்திய கடலோர காவல் படையினரால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## பிஹார் தேர்தல்: நவ.6, 11ல் வாக்குப் பதிவு; நவ.14ல் வாக்கு எண்ணிக்கை!

புதுடெல்லி: அக்.7-

பிஹார் சட்டப்பேரவை தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளது. முதற்கட்ட வாக்குப்பதிவு நவம்பர் 6 அன்றும், 2ம் கட்ட வாக்குப்பதிவு நவம்பர் 11 அன்றும் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 அன்று நடைபெறவுள்ளது.




பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்காக அறிவிப்பை தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் விவேக் ஜோஷி, சுக்பீர் சிங் சாந்து வெளியிட்டு வருகின்றனர். அதன்படி பிஹார் மாநிலத்துக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதல் கட்ட தேர்தலுக்கான வாக்குப் பதிவு நவம்பர் 6ஆம் தேதியும், இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு நவம்பர் 11ஆம் தேதியும் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 அன்று நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அக்.18ஆம் தேதியும், 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் அக்.21ஆம் தேதியும் தொடங்குகிறது.

பிஹாரில் மொத்தம் 7.43 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அதில் 3.50 கோடி பெண் வாக்காளர்களும், 3.92 கோடி ஆண் வாக்களர்களும், மூன்றாம் பாலினத்தவர் 1,725 வாக்காளர்களும் உள்ளனர். இதில் 14.1 லட்சம் முதன்முறை வாக்காளர்களாக உள்ளனர். பிஹாரில் மொத்தம் 90, 712 வாக்குச்சாவடிகள் உள்ளன. அதில் கிராமப்புறங்களில் 76,801 வாக்குச்சாவடிகளும், நகர்ப்புறங்களில் 13,911 வாக்குச்சாவடிகளும் உள்ளன.

பிஹார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 22ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதன் காரணமாக, அம்மாநிலத்துக்கான சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன. பிஹாரில் மொத்தம் 243 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இதில், கடந்த தேர்தலில் பாஜக 80, ஐக்கிய ஜனதா தளம் 45, ஹெச்ஏஎம்(எஸ்) 4, 2 சுயேட்சைகள் என தேசிய ஜனநாயகக் கூட்டணி 131 தொகுதிகளில் வெற்றிபெற்றது. ராஷ்ட்ரிய ஜனதா தளம் 77, காங்கிரஸ் 19, சிபிஐ (எம்எல்) 11, சிபிஐ(எம்) 2, சிபிஐ 2 என மகாகத்பந்தன் 111 தொகுதிகளில் வெற்றிபெற்றது. இம்முறையும் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியான மகாகத்பந்தனுக்கும் இடையேதான் போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ராமதாஸை மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரித்த முதல்வர் ஸ்டாலின்

சென்னை: அக்.7-

உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாமக நிறுவனர் ராமதாஸை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பாமக நிறுவனர் ராமதாஸின் உடல்நிலை பாதிக்கப்பட்டதை அடுத்து அவர் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, அவரது மகனும் பாமக தலைவருமான அன்புமணி ராமதாஸ், மருத்துவமனைக்குச் சென்று மருத்துவர்களிடம் அவரது உடல்நிலை குறித்து விசாரித்தார்.



பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி, “நேற்று மாலை மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். ராமதாஸுக்கு ஆஞ்சியோகிராம் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, இதயத்துக்கு செல்லும் ரத்துக்குழாய்கள் நன்றாக உள்ளன. பயப்படும்படி அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை என இதய சிகிச்சை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவர் 2 நாட்கள் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து சாப்பிடும் மாத்திரைகளை எடுக்க வேண்டும் என சொல்லியுள்ளனர். அவர் ஐசியுவில் இருப்பதால் பார்க்க முடியவில்லை. 6 மணி நேரம் ஐசியுவில் இருப்பார் அதன்பின்னர் சாதாரண அறைக்கு மாற்றப்படுவார். மருத்துவர்களிடம் பேசி விவரங்களை கேட்டறிந்தேன்” என்றார்.

இதையடுத்து, நண்பகல் 1 மணி அளவில் மருத்துவமனை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "பாமக நிறுவனர் ராமதாஸ், வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல்நிலையை மூத்த இதயநோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் செங்கோட்டுவேலு கண்காணித்து வருகிறார். அவருக்கு முழுமையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் இரு தினங்களில் அவர் வீட்டுக்குச் செல்வார்" என எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மருத்துவமனைக்கு நேரில் சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின், ராமதாஸை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவர் பெருமதிப்புக்குரிய மருத்துவர் ராமதாஸை சந்தித்து, அவரது உடல்நலன் குறித்துக் கேட்டறிந்தேன். அவர் விரைந்து நலம்பெற்று, தமது வழக்கமான பணிகளைத் தொடர்ந்திட விழைகிறேன்" என தெரிவித்துள்ளார்.

அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் உடல்நிலை குறித்தும் முதல்வர் கேட்டறிந்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "வைகோ உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தியறிந்ததுமே நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். இன்று மருத்துவமனைக்குச் சென்று, அவரது குடும்பத்தாரிடமும், மருத்துவரிடமும் அவரது சிகிச்சை குறித்துக் கேட்டறிந்தேன்" என தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு ஆகியோர் உடன் இருந்தனர்.

## அக்.9ல் கோட்டை முற்றுகை : அரசுப் போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் அறிவிப்பு

சென்னை: அக்.7-



அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், நிலுவையில் உள்ள ஓய்வூதிய பணப்பலன்களை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் வியாழக்கிழமை (அக்.9) கோட்டை முற்றுகைப் போராட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது குறித்து சம்மேளன துணைத் தலைவர் ஏ.பி.அன்பழகன் மற்றும் பொதுச்செயலாளர் ஆறுமுக நயினார் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு திமுக தேர்தல் வாக்குறுதிப்படி பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், 17 மாதங்களாக நிலுவையில் உள்ள ஓய்வூதிய பணப்பலன்களை வழங்க வேண்டும், தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யும் பணம் உரிய கணக்கில் சேர்க்கப்பட வேண்டும், பணிபுரியும் ஊழியர்களுக்கான ஒப்பந்த நிலுவைத் தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சிஐடியு சார்பில் கடந்த ஆகஸ்ட் 18ம் தேதி முதல் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

தமிழகம் முழுவதும் 22 மையங்களில் நடைபெறும் இக்காத்திருப்பு போராட்டத்தில் தினமும் சுமார் 2,000 பேர் அளவிற்கு ஓய்வுப் பெற்ற மற்றும் பணிபுரியும் தொழிலாளர்கள் பங்கேற்று வருகின்றனர். தொடர் காத்திருப்பு போராட்டம் இன்றுடன் (அக்.6ம் தேதி) 50ம் நாள் நிறைவு பெற்றுள்ளது. அமைதியான முறையில் பொதுமக்கள் சேவையும் பாதிக்கப்படாமல் கடந்த 50 நாட்களாக நடைபெறும் தொடர் போராட்டத்தின் கோரிக்கைகளைப் பேசி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. கடந்த செப்டம்பர் 1ம் தேதி போக்குவரத்து அமைச்சர் அழைத்து பேசினார். சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக்கொண்டார். நிதித் துறையுடன் பேசிவிட்டு பதில் அளிப்பதாக கூறிய அமைச்சர் இதுவரை எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.

நடைபெறும் போராட்டம் புதிய கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறவில்லை. தொழிலாளர்களின் பணம் ரூ.15 ஆயிரம் கோடியை கழக நிர்வாகங்கள் செலவு செய்துவிட்டன. கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறும் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண அரசு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அரசின் இந்நடவடிக்கை கண்டனத்திற்கு உரியதாகும்.

சிஐடியு முன்வைத்துள்ள கோரிக்கைகளில் அரசு நடவடிக்கை எடுத்து உரிய தீர்வு காணும் வரை தொடர் காத்திருப்பு போராட்டம் தொடரும். கோரிக்கைகளை அரசு தீர்வு காண வலியுறுத்தி, அக்.9ம் தேதி வியாழக்கிழமை அன்று கோட்டை முற்றுகைப் போராட்டம் நடைபெறும். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அனைத்துப் பகுதி மக்களும் பேராதரவு தர வேண்டும் என சம்மேளனத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்” என்று அறிக்கையில் கூறியுள்ளனர்.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்


இராமநாதபுரம், அக்.07-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 291 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத் திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



கன்னியாகுமரி, அக்.07-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 280 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது 30 நாட்களிலும், உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் விரைந்து தீர்வு காணுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் நடைபெறவுள்ள உங்களுடன் ஸ்டாலின் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் குறித்து உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக வாகனங்களில் பொதுமக்களுக்கு அறிவிப்பு வழங்கும்போது டெங்கு காய்ச்சல் மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு அறிவிப்பு வழங்க வேண்டும். மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதல்படி குளோரினேசன் கலந்து குடிநீர் வழங்கப்படும் குளோரினேசன் அளவினை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் தினந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் கட்டிடங்களில், பொது இடங்களில் அதிகளவு குப்பைகள் சேராமல் சுகாதாரம் பேண வேண்டும். தூய்மை மிஷன் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சனிக்கிழமை நடைபெறும் தூய்மை பணியின் போது குப்பைகள் அகற்றப்படுவதை உறுதி செய்யவேண்டும். இவற்றினை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் 4.5 மீட்டருக்கு கீழ் குறைவான மின்வாரிய ஒயர்களை உடனடியாக மாற்றி அமைக்க மரு.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே இதுகுறித்து மின்வாரிய அலுவலருக்கு தகவல் கொடுக்கும் பட்சத்தில் உடனடியாக மாற்றி அமைத்து கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உதவி செய்யும் வகையில் கட்டணமின்றி மனுக்கள் எழுதி கொடுப்பதற்கான பிரிவு இன்று முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ. பாலசுப்பிரமணியம், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி) திரு.மைக்கேல் ஆன்டனி பெர்ணான்டோ, பத்மநாப புரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மதியழகன், மாவட்ட சுற்றுசூழல் அலுவலர் திருமதி.பாரதி, உதவி ஆணையர் (ஆயம்) திரு.ஈஸ்வரநாதன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.செந்தூர் ராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.மோகனா,மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி.பத்மபிரியா, தனித்துணை ஆட்சியர் திரு.சேக் அப்துல் காதர், துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ மதுரை மாநகராட்சி மறைமலை அடிகளார் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சிறப்பு குழந்தைகளுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை மையத்தை மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப,. ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள் அருகில் துணை மேயர் தி.நாகராஜன் அவர்கள், கல்விக் குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , கல்வி அலுவலர் ஜெய்சங்கர் , மாமன்ற உறுப்பினர் பானு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தொடர் விடுமுறை முடிந்து சென்னை திரும்பும் மக்கள்: கிளாம்பாக்கம் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல்

சென்னை, அக்.07-

தொடர் விடுமுறை முடிந்து சென்னைக்கு மக்கள் திரும்பி வருவதால் கிளாம்பாக்கம் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, காலாண்டு விடுமுறை என தொடர்ச்சியாக விடுமுறை காரணமாக, சென்னை மக்கள் ஒரு வாரத்துக்கு முன்னாகவே தென்மாவட்டங்களுக்கு சென்றிருந்தனர். விடுமுறை முடிந்து இன்று அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பள்ளிகள் வழக்கம் போல் திறக்கப்பட்டதன் காரணமாக தென்மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் நேற்று முதலே சென்னை நோக்கி தொடர்ச்சியாக படையெடுத்து வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில், செங்கல்பட்டு அருகே சிங்கபெருமாள் கோயில் அருகே காலை முதலே கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கிளாம்பாக்கம் பகுதி, ஊரப்பாக்கம் பகுதி, வண்டலூர் அருகே கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேலாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

திருச்சி, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடுமையாக இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் மதுரை மாவட்டம் மேலூர் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள விரிவான அவசர சிகிச்சை மையம் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்கள். இதனை தொடர்ந்து மேலூர் அரசு மருத்துவமனை புதிய கட்டிடத்தை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் டாக்டர் செல்வராஜ் , மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# பீகாரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் தேர்தல் ஆணையத்தின் வாக்கு திருத்தம் தமிழக அரசு மற்றும் ஜனநாயக சக்திகள் கவனம் செலுத்த எஸ் டி பி ஐ வேண்டுகோள்

தென்காசி, அக்.07-

தென்காசி மாவட்டத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை புரிந்த எஸ் டி பி ஐ கட்சியின் மாநில தலைவர் முபாரக் அவர்கள் கடையநல்லூரில் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது இதுகுறித்து செய்தியாளர்களிடம் எஸ்டிபிஐ மாநில தலைவர் கூறியதாவது.

தென்காசி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய விவசாய நிலங்களில் வன விலங்குகளின் புகுமிடம் அதிகரித்து, பயிர்களுக்கு பெரும் சேதம் ஏற்படுவதுடன், மனித உயிர்களுக்கும் ஆபத்து நேர்ந்து வருகிறது. இம்மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக இருப்பதால், வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளையும் அவர்களின் பயிர்களையும் பாதுகாப்பது அவசியமாகிறது.

வடகரை, மேக்கரை, அச்சன்புதூர், கடையநல்லூர், செங்கோட்டை, புளியங்குடி உள்ளிட்ட மலையடிவாரப் பகுதிகளில் யானைகள், காட்டெருமைகள், சிறுத்தைகள், காட்டுப்பன்றிகள் போன்ற வன விலங்குகள் அடிக்கடி புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன. குறிப்பாக, வடகரை மற்றும் அச்சன்புதூர் பகுதிகளில் 12 க்கும் மேற்பட்ட யானைகள் உலவுவதால் உயிர்ச்சேத அபாயம் அதிகரித்துள்ளது. யானை உள்ளிட்ட வன விலங்குகளின் தாக்குதல்களில் மனித உயிர்களும் பலியாக உள்ளன. அவ்வப்போது யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்கு அருகே வருவதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து அச்சத்தில் வாழ்கின்றனர்.

வனத்துறையினர் பல முயற்சிகளை மேற்கொண்டாலும், யானைகள் மீண்டும் மீண்டும் விவசாய நிலங்களில் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால், விவசாயிகள் பகலிலும் அச்சத்துடனேயே தங்கள் நிலங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளை வனப்பகுதிக்குள் விரட்டி, அகழிகள் மற்றும் வேலிகள் அமைப்பது அவசியமாகிறது. மேலும், தென்காசி மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட வன அலுவலரை நியமித்து, இப்பிரச்சினையை தீவிரமாகக் கண்காணித்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்டத்தின் புளியங்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகளவில் எலுமிச்சை




சாகுபடி செய்யப்படுகிறது. ஆகவே, எலுமிச்சை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கவும், மேம்படுத்தவும் விவசாயிகளின் கோரிக்கைபடி எலுமிச் சையை பதப்படுத்தி விற்பனை செய்யத் தேவையான வசதிகளை அரசு ஏற்படுத்தி கொடுத்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

கரூரில் தவெக தலைவர் விஜய் அவர்களின் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தில், கூட்ட நெரிசலால் 41 பேர் உயிரிழந்தது மிகுந்த அதிர்ச்சியையும் ஆழ்ந்த வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எஸ்டிபிஐ கட்சி சார்பாக ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இச்சம்பவம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பு விசாரணைக் குழு அமைத்து, பேரவலத்திற்கான காரணங்களை ஆராய உத்தரவிட்டுள்ளது. இவ்விசாரணை மூலம் உண்மைகள் கண்டறியப்பட்டு, எதிர்காலத்தில் இத்தகைய துயரங்கள் நிகழாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய, பெருந்திரளாக மக்கள் கூடும் நிகழ்வுகளில் கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும், பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்தவும், அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறோம்

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில், அதனை எதிர்கொள்ளும் வகையில் அரசுத் துறைகள் முழு தயார் நிலையில் இருக்க வேண்டும். வெள்ள பாதிப்புகளைத் தவிர்க்க, நீர்நிலைகளைத் தூர்வாருதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், கரைகளைப் பலப்படுத்துதல், வடிகால் வசதிகளைச் சரிசெய்தல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், சுகாதாரத் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் முழு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

நோய்த் தொற்றுகளைத் தடுக்க, போதுமான அளவு மருந்துகள் இருப்பு வைத்திருப்பதுடன், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் திறம்பட செயல்படத் தயாராக இருக்க வேண்டும். கடந்த கால அனுபவங்களைக் கொண்டு, வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து, பேரிடர் மேலாண்மைத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சுகாதாரத் துறை ஆகியவை இணைந்து முன்கூட்டியே தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகள் மக்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்யும் வகையில் துரிதமாகவும் திறம்படவும் செயல்படுத்தப்பட வேண்டும். பீகாரைத் தொடர்ந்து, நாடு முழுவதும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, புதுச்சேரியில் இந்தப் பணிகள் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் ஒன்றிய அரசின் அரசியல் நோக்கங்களுடன் ஒத்திசைவாகச் செயல்படுவதாகக் கருதப்படும் இந்திய தேர்தல் ஆணையத்தின் இந்தத் திட்டம், இந்திய ஜனநாயகத்திற்கு கடும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் பல கேள்விகளையும் கவலைகளையும் எழுப்புகின்றன. பீகார் மாநிலத்தில் இத்திட்டத்தின் முன்னோடிப் பரிசோதனையின்போது, ஏராளமான உண்மையான வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதால், பலர் தங்கள் வாக்குரிமையை இழந்தனர். இது வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மை குறித்து கடும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரானவை என ஜனநாயக சக்திகள் குற்றம்சாட்டுகின்றன. புதுவையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடும் இதன் முக்கிய இலக்காக இருக்கலாம் என்பதால், இது கடும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

எனவே, இந்த ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் ஆணையத்தின் இந்த சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு எதிராக எஸ்டிபிஐ கட்சி தீவிரமாகக் களமாடும். மேலும், அனைத்து ஜனநாயக சக்திகளையும், குறிப்பாக வாக்காளர்களையும், இத்திட்டத்தில் விழிப்புடன் இருக்குமாறு எஸ்டிபிஐ கட்சி வலியுறுத்துகிறது எனஅவர் தெரிவித்தார். செய்தியாளர் சந்திப்பின்போது மாநில பொதுச் செயலாளர் அகமது நவவி நெல்லை மண்டல தலைவர் சிக்கந்தர் மாவட்ட தலைவர் திவான் ஒலி பொதுச் செயலாளர் செய்யது மஹமூத் மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் சேக் முகமது ஒலி மாவட்டச் செயலாளர்கள் சீனா சேனா சர்தார் நூர்முகமது அப்துல் பாசித் மாவட்ட பொருளாளர் யாசர் கான் மாவட்ட செயற்குழு உறுப்பினர் அஸ்கர் அலி கடையநல்லூர் தொகுதி தலைவர் ஹக்கிம் சேட் துணைத் தலைவர் நைனா முகமது கனி செயலாளர் ஜாஷித் அலி இணைச் செயலாளர் நாகூர் ஹனி பொருளாளர் சையது பாதுஷா செயற்குழு உறுப்பினர்கள் பாதுஷா அவன் கடையநல்லூர் நகர தலைவர் வழக்கறிஞர் லுக்மான் வைத்தியம் துணைத் தலைவர் சாகுல்ஹமீது செயலாளர் தாஜுதீன் இணைச்செயலாளர் சைபுல்லா வேளாண் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் காசிம் இணை ஒருங்கிணைப்பாளர் அன்சாரி மகளிர் அணி மாவட்ட தலைவி பரக்கத் நிஷா எஸ் டி டி யு தொழிற் சங்கம் மாவட்ட தலைவர் அசன் கனி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

மாலை தந்தி

செவ்வாய்க்கிழமை 7.10.2025



## மதுரையில் ரூ16 கோடி மதிப்பீட்டில் தாட்கோ அரசு கல்லூரி மாணவியர் விடுதி திறப்பு விழா

மதுரை, அக்.07-

மதுரை மாவட்டம் தாட்கோ மதுரை கோட்டம் மூலம் அரசு கல்லூரி மாணவியர்கள் தங்குவதற்காக புதிய மூன்று தளங்களுடன் 37271 சதுரடியில், 16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்புடன் 258 மாணவியர்கள் தங்குவதற்கு ஏற்றாற்போல் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள விடுதியை தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் ராமகிருஷ்ணன், கண்காணிப்பாளர் சேவியர் உதவி பொறியாளர்கள் பிரியதர்ஷினி, விவேக், ஒப்பந்ததாரர் வேலானி, விடுதி காப்பாளர் லட்சுமி,மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மாணவியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது

கடலூர், அக்.07-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தலைமையில் இன்று (06.10.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 478 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி, தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) தனலட்சுமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## "சிறப்பு குழந்தைகளுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை மையம்" மேயர் இந்திராணி பொன்வசந்த் திறந்து வைத்து பார்வையிட்டார்

மதுரை, அக்.07-

மதுரை மாநகராட்சி மறைமலை அடிகளார் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் சிறப்பு குழந்தைகளுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை மையத்தை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.



மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 64 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அப்பள்ளிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாற்றுத் திறன் கொண்ட (CWSN – Children With Special Needs) மாணவர்கள் பயின்று வருகிறார்கள். மறைமலை அடிகளார் உயர்நிலைப் பள்ளியில் 30க்கும் மேற்பட்ட மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இம்மையத்தில் பயிற்சி அளிப்பதற்கு 3 சிறப்பு பயிற்றுநர்கள் 1 Occupational Therapist, 1 Physiotherapist, 1 மைய பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் தெரபிஸ்ட்கள் நேரடியாக பள்ளிகளில் சென்று, மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் ஆரோக்கியத்திறனை கண்காணித்து, தேவையான உதவிகளை வழங்குவார்கள். இந்த மையம் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் கல்வி மற்றும் சுகாதார ஆதரவை வழங்கும் முக்கிய முயற்சியாக அமைந்து உள்ளது. மறைமலை அடிகளார் உயர்நிலைப்பள்ளியில் புதிய CWSN சிறப்பு கல்வி மற்றும் சிகிச்சை மையத்தை மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகளில் முதல் முறையாக மதுரை மாநகராட்சி பள்ளிகளில் "சிறப்பு குழந்தைகளுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை மையம்" திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மதுரை மாநகராட்சி பள்ளிகள் ஐ.ஐ.டி.மெட்ராஸ் "School Connect" திட்டத்தில் இணைப்பு:

மதுரை மாநகராட்சியின் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், ஐ.ஐ.டி.மெட்ராஸ் வழக்கும் "IIT School Connect Programme" எனும் சிறப்புத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் மாணவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்காக அமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் 24 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் பங்கேற்கின்றன. இதில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவிகளுக்காக இரண்டு மாத கால சிறப்பு பயிற்சிகள் நடைபெற உள்ளன. இந்த ஐ.ஐ.டி. ஸ்கூல் இணைப்பு திட்டத்தின் மூலம் மாணவர்கள் தங்களின் மேல்நிலை கல்வி முடிந்தபின் கல்லூரியில் தெரிவு செய்யும் துறைப்பாடத்திற்கு ஏற்ப 10 வகையான தொழில்நுட்ப அடிப்படை பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமான சில 1) Introduction to Data Science and Artificial Intelligence. 2) Introduction to Electronics Systems, 3) Introduction to Engineering Biological Systems மற்றும் இதனைத் தொடர்ந்து பல புதுமையான பாடப்பிரிவுகள் அடங்கும்.

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் இருந்து 211 மாணவ, மாணவிகள் இப்பயிற்சிகளுக்காக பதிவு செய்துள்ளனர். அவற்றில் அதிகபட்சமாக "Introduction to Data Science and AI" என்ற பாடப்பிரிவில் 142 மாணவர்கள் தேர்வு செய்து ள்ளனர். மாணவர்கள் தங்களது பள்ளி களில் அமைக்கப்பட்டுள்ள ஹைடெக் லேப் (உயர் தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள்) மூலம் இப்பயிற்சிகளில் நேரடியாக கலந்து கொள்வார்கள். இப்பயிற்சிகளுக்கான கட்டணங்கள் முழுமையாக மதுரை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 6 ஆம் தேதி முதல் இப்பயிற்சிகள் துவங்கி 2025 டிசம்பர் 1 ஆம் தேதி நிறைவடையும். இத்திட்டத்திற்கான தேர்வு டிசம்பர் 14ஆம் தேதி நடைபெற உள்ளது. மாணவர்களுக்கு பயிற்சி சிறப்பாக நடைபெற ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பொறுப்பு ஆசிரியர் (Nodel Teacher) நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி, எதிர்கால உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான வலுவான அடித்தளமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், கல்விக்குழுத்தலைவர் திரு.ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவிப்பொறியாளர் திரு.ஷர்புதீன், மாமன்ற உறுப்பினர் திருமதி. பானு உட்பட மாநகராட்சி அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கேளிக்கை பூங்காக்களில் நிரந்தர ராட்சத ராட்டினம் இயக்க சுற்றுலாத் துறையிடம் அனுமதி பெற வேண்டும்: தமிழ்நாடு அரசு அரசாணை



சென்னை, அக்.07-

கேளிக்கை பூங்காக்களில் நிரந்தர ராட்சத ராட்டினம் இயக்க சுற்றுலாத் துறையிடம் அனுமதி பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு அரசானை வெளியிட்டுள்ளது. புதிதாக ராட்சத ராட்டினம் அமைப்பவர்கள் சம்பந்தப்பட்ட துறையிடம் ஐ.எஸ்.ஓ. தரச்சான்று பெற வேண்டும். ஏற்கனவே ராட்சத ராட்டினம் அமைத்துள்ளவர்கள் 6 மாதத்துக்குள் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற வேண்டும். தற்காலிகமாக ராட்சத ராட்டினம் இயக்க சம்பந்தப்பட்ட துறைகளிடம் அனுமதி பெற வேண்டும். தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறையிடம் அனுமதி பெற வேண்டும். ஆன்லைன் மூலம் அனுமதி பெறுவதற்கான இணையதளம் விரைவில் உருவாக்கப்படும்



## அண்ணாமலையார் கோயிலில் கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது: உயர் நீதிமன்ற நீதிபதிகள் திட்டவட்டம்

திருவண்ணாமலை, அக்.07-

அண்ணாமலையார் கோயிலில் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன்பாக கோயில் நிதியில் வணிக வளாகம் கட்டுவதை எதிர்த்து ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவரான மயிலாப்பூர் டி.ஆர்.ரமேஷ் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் தொடர்பாக விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார், எஸ்.சவுந்தர்குமார் ஆகியோர், கோயிலுக்குள் எந்த கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என இடைக் காலத் தடை விதித்து, விசாரணையை அக். 16ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளனர்.

இந்நிலையில், நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், எஸ்.சவுந்தர் ஆகியோர் திருவண்ணாமலைக்கு நேற்று சென்று, அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன்பு, அம்மனி அம்மன் கோபுரம் அருகே நடைபெறும் கட்டுமான பணி, கோயில் வளாகத்துக்குள் உள்ள விருந்தினர் இல்லங்களை ஆய்வு செய்தனர்.

பின்னர், கோசாலை பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, "கோயில் வளாகத்துக்குள் நிரந்தர கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது. காத்திருப்பு அறையை போதிய காற்றோட்டத்துடன், மேல் பகுதியில் சீட் அமைத்து, குடிநீர் வசதியுடன் ஏற்படுத்திக் கொடுங்கள். பெரிய கட்டிடம் தேவை இல்லை.

கோயில் வளாகத்துக்குள் கழிப்பறைகள் கட்டக் கூடாது. கோயில் சுவரை எக்காரணத்தைக் கொண்டும் சேதப்படுத்திவிடக் கூடாது. இதுபோன்ற கோயிலை தற்போது அரசாங்கத்தால் கட்ட முடியுமா?" என்று அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

மேலும்,பிரசாதக் கடை கட்டுவதற்காக வைத்திருந்த திட்டத்தைப் பார்வையிட்ட நீதிபதிகள், கோயிலுக்குள் எந்தக் கட்டிடமும் கட்ட கூடாது என்று உத்தரவிட்டனர். ஆய்வின் போது, ஆட்சியர் கா.தர்ப்பகராஜ், மாவட்ட நீதிபதி மதுசூதனன், எஸ்.பி. எம். சுதாகர், அறநிலையத் துறை இணை ஆணையர் பரணிதரன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## கோவை ஜேகே டயர் ரேசிங் 2025

கோவை, அக்.07-

ஜேகே டயர், மொபில் 1 இன் செயல்திறன் கொண்ட இந்திய ரேசிங் விழாவின் 3வது சுற்று, கோயம்புத்தூரில் உள்ள கரி மோட்டார் ஸ்பீட்வேயில் நடைபெற்றது.


இதில் இந்திய ரேசிங் லீக் கோவா ஏசஸ் ஜே.ஏ ரேசிங்கின் ரவுல் ஹைமான் சீசனின் 2வது வெற்றியைப் பெற ஆதிக்கம் செலுத்துகிறார்.2வது நாளில், அனைவரின் பார்வையும் இந்திய ரேசிங் லீக்கின் டிரைவர் பி பந்தயத்தில் இருந்தது.ஸ்பீட் டெமான்ஸ் டெல்லி அணியின் உரிமையாளர் அர்ஜுன் கபூர், யுனைடெட் கிங்டமைச் சேர்ந்த கோவா ஏசஸ் ஜே.ஏ ரேசிங் டிரைவர் ரவுல் ஹைமான் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தி, சீசனின் 2வது வெற்றிக்காக 26:46.480 நேரத்தில் ஓட்டினார்.29 வயதான அவர், பாதையின் 16 மூலைகளிலும் துல்லியம் மற்றும் கட்டுப்பாட்டோடு தனது காரை ஓட்டி,ஆறு வினாடிகள் பின்தங்கிய ஸ்பீட் டெமான்ஸ் டெல்லியின் ஷாஹான் அலி மோசினைத் தடுக்க தனது அமைதியையும் அனுபவத்தையும் வெளிப்படுத்தினார்.

கிச்சாவின் கிங்ஸ் பெங்களூருவின் ருஹான் ஆல்வா, 4வது இடத்தில் இருந்து ஒரு வலுவான டிரைவ் மூலம் 3ம் இடத்தைப் பிடித்தார்.

ஃபார்முலா 4 இந்திய சாம்பியன்ஷிப் 2 3 நாள் பரபரப்பானது, ஷேன் சந்தாரியா, இட்சுகி சாடோ மற்றும் இஷான் மாதேஷ் ஆகியோர் கடுமையாகப் போட்டியிட்ட 3 பந்தயங்களில் சிறந்து விளங்கினர்.

ரேஸ் 3 இல், ஜப்பானிய வீரர் சாடோ பதிலடி கொடுத்து, இறுதி சுற்றில் சந்தரியா மற்றும் சச்செல் ரோட்ஜ் (கிச்சாவின் கிங்ஸ் பெங்களூரு) மோதியதை அடுத்து வியத்தகு முறையில் வெற்றியைப் பெற்றார். சம்புட்லா மீண்டும் 2 வது இடத்தைப் பிடித்தார், மாதேஷ் (கொல்கத்தா ராயல் டைகர்ஸ்) 3 இடத்தைப் பிடித்தார்.

ரேஸ் 4 இல் மாதேஷ் வெற்றியைப் பெற்றார், கிரிட்டில் நான்காவது இடத்தில் இருந்து சைஷிவ சங்கரன் (ஸ்பீட் டெமான்ஸ் டெல்லி) மற்றும் சந்தரியா ஆகியோரை முந்தி சீசனின் இரண்டாவது வெற்றியைப் பெற்றார், கோவை நடந்த ஃபார்முலா 4 பந்தயத்தின் அதிரடி வார இறுதியை




நிறைவு பெற்றது.

ஜேகே டயர், மொபில் 1 இன் செயல்திறன் கொண்ட இந்திய ரேசிங் விழாவின் 3வது சுற்று, கோயம்புத்தூரில் உள்ள கரி மோட்டார் ஸ்பீட்வேயில் நடைபெற்றது.

இதில் இந்திய ரேசிங் லீக் கோவா ஏசஸ் ஜே.ஏ ரேசிங்கின் ரவுல் ஹைமான் சீசனின் 2வது வெற்றியைப் பெற ஆதிக்கம் செலுத்துகிறார்.2வது நாளில், அனைவரின் பார்வையும் இந்திய ரேசிங் லீக்கின் டிரைவர் பி பந்தயத்தில் இருந்தது.ஸ்பீட் டெமான்ஸ் டெல்லி அணியின் உரிமையாளர் அர்ஜுன் கபூர், யுனைடெட் கிங்டமைச் சேர்ந்த கோவா ஏசஸ் ஜே.ஏ ரேசிங் டிரைவர் ரவுல் ஹைமான் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தி, சீசனின் 2வது வெற்றிக்காக 26:46.480 நேரத்தில் ஓட்டினார்.29 வயதான அவர், பாதையின் 16 மூலைகளிலும் துல்லியம் மற்றும் கட்டுப்பாட்டோடு தனது காரை ஓட்டி,ஆறு வினாடிகள் பின்தங்கிய ஸ்பீட் டெமான்ஸ் டெல்லியின் ஷாஹான் அலி மோசினைத் தடுக்க தனது அமைதியையும் அனுபவத்தையும் வெளிப்படுத்தினார்.

கிச்சாவின் கிங்ஸ் பெங்களூருவின் ருஹான் ஆல்வா, 4வது இடத்தில் இருந்து ஒரு வலுவான டிரைவ் மூலம் 3ம் இடத்தைப் பிடித்தார்.

ஃபார்முலா 4 இந்திய சாம்பியன்ஷிப் 2 3 நாள் பரபரப்பானது, ஷேன் சந்தாரியா, இட்சுகி சாடோ மற்றும் இஷான் மாதேஷ் ஆகியோர் கடுமையாகப் போட்டியிட்ட 3 பந்தயங்களில் சிறந்து விளங்கினர்.

ரேஸ் 3 இல், ஜப்பானிய வீரர் சாடோ பதிலடி கொடுத்து, இறுதி சுற்றில் சந்தரியா மற்றும் சச்செல் ரோட்ஜ் (கிச்சாவின் கிங்ஸ் பெங்களூரு) மோதியதை அடுத்து வியத்தகு முறையில் வெற்றியைப் பெற்றார். சம்புட்லா மீண்டும் 2 வது இடத்தைப் பிடித்தார், மாதேஷ் (கொல்கத்தா ராயல் டைகர்ஸ்) 3 இடத்தைப் பிடித்தார்.

ரேஸ் 4 இல் மாதேஷ் வெற்றியைப் பெற்றார், கிரிட்டில் நான்காவது இடத்தில் இருந்து சைஷிவ சங்கரன் (ஸ்பீட் டெமான்ஸ் டெல்லி) மற்றும் சந்தரியா ஆகியோரை முந்தி சீசனின் இரண்டாவது வெற்றியைப் பெற்றார், கோவை நடந்த ஃபார்முலா 4 பந்தயத்தின் அதிரடி வார இறுதியை நிறைவு பெற்றது.

## மயிலாப்பூர் கற்பகாம்பாளுக்கு வைரம் பதித்த தங்க மூக்குத்தி அணிவித்தார் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

சென்னை, அக்.07-

காஞ்சி காமகோடி பீடத்தின் 70வது சங்கராச்சாரியாரான ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சென்று கற்பகாம்பாளுக்கு வைரம் பதித்த தங்க மூக்குத்தியை அணிவித்தார். ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வை கண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை வழங்குகையில், ஆதிசங்கரரின் திரிபுர சுந்தரி மானச பூஜை ஸ்தோத்திரம் மற்றும் லலிதா சஹஸ்ரநாமம் ஆகியவற்றின் குறிப்புடன், தேவிகளுக்கு அலங்காரம் செய்யும் ஆதிசங்கரர் பாரம்பரியத்தை நினைவு கூர்ந்தார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் திருவானைகோவிலில் அகிலாண்டேஸ்வரிக்கு தாண்டக பிரதிஷ்டை (காது அலங்காரம்) ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால் வழங்கப்பட்டது. இப்போது மூக்குத்தி வழங்கப்பட்டுள்ளது. 1966 பிப்ரவரி 19ம் தேதியன்று இதே விஸ்வாவசு ஆண்டில் காஞ்சி காமகோடி பீடத்தின் மகாஸ்வாமிகள் கபாலீஸ்வரர் கோயிலுக்கு விஜயம் செய்தபோது, தருமபுரம் ஆதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைவ ஆன்மிக சேவை நிகழ்வான தெய்வீக பேரவையை 68வது சங்கராச்சாரியார் தொடங்கி வைத்தார்.

அந்த நிகழ்வையும் இப்போது அவர் நினைவுகூர்ந்தார். முன்னதாக ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை இணை ஆணையர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி பி.கே.கவேனிதா மற்றும் கோயில் அறங்காவலர்கள் பாரம்பரிய மரியாதையுடன் வரவேற்றனர்.

# 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்கும் வகையில் சென்னையில் வள்ளலார் சர்வதேச மாநாடு நடைபெற உள்ளது: அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு ஆகியோர் தகவல்





கடலூர், அக்.06-

கடலூர் மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் நேற்று முன்தினம் (05.10.2025) கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெற்ற திருஅருட் பிரகாச வள்ளலாரின் 203 ஆம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்.

வள்ளலார் தெய்வ நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட வஸ்திரங்களை ஏழை எளிய பொதுமக்களுக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து, வடலூர் சத்திய ஞான சபை அருகே சர்வேத வள்ளலார் மையம் பிரிவில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

வள்ளலார் அவர்களின் 203 ஆம் வருவிக்க உற்றநாள் விழா கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தோம். அருட்பிரகாச வள்ளலார் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை அமைப்பதற்கு ரூ.99.90 கோடியை அரசு நிதியாக வழங்கினார்கள். இந்த சர்வதேச மையம் அமைக்க பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்கு பிறகு "B" site பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, வரும் டிசம்பர் மாதம் வள்ளலாரின் அருந்தவ சீடர்களுக்கு அர்ப்பணிக்கப்படும். மற்றொரு பகுதியான "A" siteல் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு வழக்கு நிலுவையில் இருப்பதால், நீதிமன்ற உத்தரவிற்கு பின் அந்த பணிகளும் மேற்கொள்ளப்படும்.

வள்ளலார் இந்த நாட்டிற்கு தந்த அறநெறிகளை பாதுகாத்திடும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" என கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்கள். மேலும், வள்ளலார் அவர்கள் தருமசாலை துவக்கிய 156 வது ஆண்டு தொடக்கம், வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200வது ஆண்டு தொடக்கம், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டு என மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முப்பெரும் விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள். இராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற இந்த விழாவின் தொடக்க நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே கலந்து கொண்டு, "வள்ளலார் 200" இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்ததோடு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிறைவு நாள் விழாவிலும் கலந்து கொண்டு வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்த்தார். அதோடு மட்டுமல்லாமல் முப்பெரும் விழாப் பணிகளுக்காக ரூ.3.25 கோடியை அரசு நிதியாக வழங்கினார்.

சென்னையில் வள்ளலார் அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு வள்ளலார் நகர் என்று பெயர் சூட்டியதோடு, அந்த பகுதியிலுள்ள பேருந்து நிலையத்திற்கும் அவர் பெயரை சூட்டி பெருமை சேர்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ. 6 கோடி செலவில் பயணிகளின் அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற வகையில் உருவாக்குகின்ற பணியை தொடங்கி வைத்துள்ளார்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் வருகின்ற நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் சென்னையில் மிகப்பெரிய அளவில் 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் குறிப்பாக 2000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்கின்ற வள்ளலார் சர்வதேச மாநாட்டை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அம்மாநாட்டில் வள்ளலாரின் பெருமைக்கு புகழ் சேர்க்கின்ற 25 சன்மார்க்கிகளுக்கு பட்டயம் வழங்கி சிறப்பு செய்திடவும், வள்ளலார் குறித்த நூலும் வெளியிடப்படவும் உள்ளது.

இப்படி அனைத்து வகைகளிலும் வள்ளலாரின் அறநெறிகளை பாதுகாக்கும் அரசாக திராவிட மாடல்அரசு திகழ்கிறது. இத்தகைய பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாவட்ட அமைச்சர் . எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் துறையின் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைவருக்கும் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருவெளிக்கு, வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் இடத்தால் எவ்வித இடர்பாடும் இல்லை என்று நீதிமன்றத்தில் நாங்கள் எடுத்து வைத்த வாதத்தின் அடிப்படையில் ஒரு பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது. மற்றொரு பகுதியில் உள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகளை கணக்கிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டதன்படி அறிக்கை அளித்துள்ளோம். நிச்சயமாக நீதி வெல்லும், வள்ளலார் சர்வதேச மையம் திறந்த மனதோடு, எவ்வித காழ்ப்புணர்ச்சிக்கும் இடம் தராமல் அவரது புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் அமைத்திட வேண்டும் என்ற இந்த நற்பணிக்கு வள்ளலாரின் ஆன்மா எல்லா வகையிலும் துணை நிற்கும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன்,இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் சி.ஜோதி, உதவி ஆணையர் ஆர்.சந்திரன், நிர்வாக அலுவலர் ஜெ.ராஜா சரவணகுமார், அரசு அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ சென்னை,வியாசர்பாடி சர்மா நகர் ஒன்பதாவது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்பன் ஆலய கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது, நிகழும் மங்களகரமான தட்சிணாயணம் விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் சர்வ ஏகாதசி திதி திருவோணம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் ஸ்ரீ தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் ஐயப்பன் விக்ரக பிரதிஷ்டம் மற்றும் சுற்று கோயில் விநாயகர், பாலமுருகன், துர்க்கை அம்மன்,விக்ரக பிரதிஷ்டம் பிரம்மா ஸ்ரீ கோவிந்தன் நம்பூகிரி அவர்களால் சிறப்பான முறையில் நடத்தினார், மேலும் ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்ப சேவா சங்கம் மற்றும்சர்மா நகர் இளைஞர் நல சங்கம் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர், இவ்விழாவுக்கு சிறப்பு அழைப்பாளராக சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர். டி.சேகர் கலந்து கொண்டு சிறப்பித்தார், சாமி தரிசனம் செய்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில்

# மாவட்ட செயலாளர் மணிமாறன் மகளிர் அணி செயலாளர் கிருத்திகா தங்கபாண்டி தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா




மதுரை, அக்.07-

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பாக திருப்பரங்குன்றம் வடக்கு பகுதிக்குட்பட்ட 93வது வட்டம் பசுமலை பகுதியில் அரசின் சாதனைகளையும் பெண்கள் முன்னேற்றத்திற்காக நமது அரசின் சிறப்பான திட்டங்களையும் செயல்பாடுகளையும் எடுத்துக்கூறி 2200 குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் . சேடபட்டி மு.மணிமாறன் தலைமையிலும், திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி செயலாளர் கிருஷ்ண பாண்டி முன்னிலையிலும், மதுரை தெற்கு மாவட்ட மகளிர்அணி சார்பில் மகளிர் அணி செயலாளர் கிருத்திகா தங்கப்பாண்டி முன்னிலையில் வழங்கினர்.

இந்நிகழ்வில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவகாசி த.வனராஜா , வடக்கு பகுதி வட்டக்கழக செயலாளர் ஜெயராமன், திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி , மாமன்ற உறுப்பினர் - மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் காளிதாஸ், தொண்டர் மகளிர் அணி அமைப்பாளர் பிரமிளா பீமன், மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு மழைஎன்றும் பாராமல் நலத்திட்ட உதவிகளை மகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றனர்.

# நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் உதவி மையம் தொடக்கம்



■ கலெக்டரை சந்தித்து மனு அளிக்க வரும் பொதுமக்கள் மனு எழுதத் தெரியாத பட்சத்தில் இந்த உதவி மையத்தை அணுகினால் கட்டணமின்றி மனு எழுதிக் கொடுத்து உதவி செய்வார்கள்.

# வெள்ள மீட்பு பணிக்கு உதவிய இந்தியாவுக்கு பூடான் நன்றி

புதுடெல்லி, அக்.07-

பூடானில் கனமழை காரணமாக அமோசு ஆற்றில் நேற்று அதிகாலை திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் ஆற்றங் கரையில் தங்கியிருந்த சிலரை உள்ளூர் மீட்புக் குழுவினர் உடனடியாக மீட்டனர். ஆற்றங்கரைக்கு வெகு தூரத்தில் சிக்கியிருந்த 4 ஊழியர்களை மீட்க முடியவில்லை. இதில் 2 பேர் காணாமல் போய்விட்டதாக முதலில் தகவல் பரவியது. மோசமான வானிலை காரணமாக பூடான் அரசால், ஊழியர்களை மீட்க ஹெலிகாப்டரை அனுப்ப முடியவில்லை. இதையடுத்து பூடான் ராணுவத்தினர், இந்திய ராணுவத்தை தொடர்பு கொண்டு உதவி கேட்டனர். இதையடுத்து இந்திய ராணுவத்தினர் 2 ஹெலிகாப்டர்களில் உடனடியாக விரைந்து சென்று வெள்ளத்தில் சிக்கிய ஊழியர்கள் இருவரை மீட்டனர். காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட இருவரையும் பூடான் ஹெலிகாப்டர் பின்னர் மீட்டது. சரியான நேரத்தில் ஹெலிகாப்டர்கள் அனுப்பி உதவி செய்த இந்திய ராணுவத்தினருக்கு ராயல் பூடான் அரசு நன்றி தெரிவித்துள்ளது.



# திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்ற கூட்டுறவுத்துறை அமைச்சர்

காளையார் கோவில், அக்.07-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக மறவமங்கலம் திமுக கிளைக்கழக செயலாளர், மூத்த முன்னோடி ஜோதிராமலிங்கம் இல்ல விழாவில் கலந்து கொள்வத ற்காக வருகைபுரிந்த அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஜோதிராமலிங்கம் குடும்பத்தினர் கைத்தறியாடை போர்த்தி வரவேற்றனர்...

அப்போது மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சேர்மன் எஸ். மாராயப்பன் கென்னடி, வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் ஆர். எம். கென்னடி, துணைச்செயலாளர் கோலாந்தி தொழிலதிபர் கோதண்டபாணி, தொழிலதிபர் சேதுமாதவன், எஸ்தர் மேரி , கிளைக்கழக செயலாளர் ஆர். வி. எஸ். அரங்கநாதன், அவைத்தலைவர் வரதராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் துரை. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்...

இதனிடையே காளையார்கோவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சாளர் புலிக்கண்மாய் கிராமத்தைச்சேர்ந்த மலைச்சாமி , சமீபத்தில் இருசக்கர வாகனம் மோதி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த மலைச்சாமி ஐ அழைத்து தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உடல் நலம் பற்றி விசாரித்ததோடு மட்டுமல்லாது வைத்த கோரிக்கையை உடனே நிறைவேற்றி தனது சொந்த நிதியிலிருந்து நிதிஉதவியும் அளித்து ஆறுதல் கூறினார்.

இந்த நிகழ்ச்சியானது அங்குள்ளவர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த நிகழ்ச்சியின்போது மாவட்ட மாணவரணி கதிர் இராஜ்குமார், வர்த்தக அணி ருக்மா சரவணன் , கொக்கி குமார், மடப்புரம் மகேந்திரன், லாடனேந்தல் சுப்பையா, மாவட்டம் சிறியூர் அழகர்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடனிருந்தனர்.

# மும்பை வருகை தந்திருந்த அமைச்சர் மனோ தங்கராஜ்-க்கு மும்பை திமுக மற்றும் மும்பை புறநகர் திமுக சார்பில் விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு



பல்வேறு நிகழ்வுக்காக மும்பை வருகை தந்திருந்த பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ்-க்கு மும்பை திமுக மற்றும் மும்பை புறநகர் திமுக சார்பில் விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது

அதைத் தொடர்ந்து பாண்டுப் பிரைட் உயர்நிலைப் பள்ளியில் பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன் தலைமையில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதல் நிகழ்வா தமிழக முதல்வர் அவர்களால் 2017 லில் பள்ளி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை க்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

அதன் பிறகு கழக தோழர்கள் சார்பில் சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மலரை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் வழங்கினார்கள்.

பம்பாய் நாடார் சங்க தலைவர் ஜனா ராஜா இளங்கோ, செயலாளர் பேலஸ்துரை மற்றும் ஏராளமானோர் சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

அனைவருக்கும் பள்ளியின் தாளாளர் திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் அவர்கள் அனைவருக்கும் மதிய அசைவ உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

அதன் பிறகு மாலை இந்திய நாடார் பேரமைப்பு சார்பில் தாராவி மானிங்ஸ்டார் பள்ளியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த அமைச்சருக்கு தாராவியில் மும்பை திமுக சார்பில் மும்பை திமுக பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, ம.நீதிதுரை, ஜவேரிபஜார் பகுதி செயலாளர் வே.ரவிச்சந்திரன், வக்கோலா பகுதி செய லாளர் சேலம் மா.சீனிவாசன், பொய்சர் க.மூர்த்தி அன்பில் ரஞ்சன் தே.ஸ்டி பன், எம்.ராஜன், இரா. மதியழகன் காளிமுத்து, ஏர்வாடி ஆனந்த் பேபிராஜ் மராத்திய மாநில விடுதலை சிறுத்தைகள் கட்சி அமைப்பாளர் சாலமோன்ராஜா, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ரவிகுணசீலன், தென்னிந்திய ஆதி திராவிட மகாஜன சங்க தலைவர் எஸ்.பி ஆனந்த் மற்றும் பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் திமுக பொறுப்பு குழு தலைவர் ம.சேசுராசு (மும்பை) கலந்து கொண்டு வரவேற்பளித்தார்கள்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161